பதிவு எண் : ஊ. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 13] சென்னை : கார்த்திகை 7உ (23—11—67) வியாழன் வெளியூர் : கார்த்திகை 8உ (24—11—67) வெள்ளி [இதழ் : 134

# டில்லியின் 'அரசியல் தர்மம்'!

## 'இழி நிலைக்குத் தாழ்ந்துவிட்டிருப்பது வருந்தத்தக்கது'!

### காங்கிரசல்லாத அரசுகளுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து அறிஞர் அண்ணா

சென்னை, நவ. 23—

"மத்திய அரசு இப்போது தன்னிடம் வைத்துக்கொண்டிருக்கும் அவசியமற்ற அதிகாரங்களைத் துறந்தால்தான் அது பலன் வாய்ந்ததாகவும், திறனுடையதாகவும் விளங்கமுடியும்.

"நாட்டின் ஆதிபத்திய உரிமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்கு வேண்டிப அதிகாரங்களைத் தன்னிடம் வைத்துக்கொண்டு, பிற அதிகாரங்களை மாநிலங்களுக்கு அளித்துவிடுவதற்கு மத்திய அரசு தயாராக இருக்கவேண்டும்.

"சர்க்கரைக் கட்டுப்பாடு—விலை உயர்வு முதலியவற்றையே எடுத்துக் கொள்ளுவோம் ; இந்தப் பிரச்சினைகளில் எல்லாப் பொறுப்புக்களும் மாநில அரசுகளைச் சார்ந்தவைதான் ; ஏனெனல், பொதுமக்கள், மாநில அரசுகளைத்தான் கேட்கிறார்களே தவிர, மத்திய அரசை அல்ல !

"பொதுமக்களின் கோரிக்கைகளுக்கும் வேண்டுகோள்களுக்கும் செவிமடுத்து, அவற்றை நிறைவு செய்ய வேண்டுமெனில், இந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீர்த்துவைப்பதற்கு வேண்டிய போதிய அதிகாரங்கள் மாநில அரசுகளடம் இருக்கவேண்டியது அவசியமாகும்"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், சென்னை அனைத்துக் கல்லூரி மாணவர் பேரவையைத் துவக்கிவைத்துப் பேசுகையில் விளக்கிக் கூறினார்.

"மேற்கு வங்கத்திலும், அரியானாவிலும் அமைச்சரவைகள் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டிருப்பது 'நாட்டின் எந்தப் பகுதியிலும் காங்கிரசல்லாத அரசுகள் இருப்பதை மத்திய அரசால் சகித்துக்கொள்ள இயலவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது" என்றும் முதலமைச்சர் சுட்டிக் காட்டினார்.

"மேற்கு வங்கத்தில் நக்சல்பாரி சம்பவங்கள் நடக்கும் போதெல்லாம் வாளாவிருந்துவிட்டு, அந்த மாநிலத்தின் அரசியலில் சில நல்ல போக்குகள் காணப்படும் நேரத்தில் இந்தத் தீவிரமான நடவடிக்கையை எடுத்துக்கோண்டிருக்கும் மத்திய அரசின் மனப்பான்மையை என்னால் புரிந்துகோள்ள முடியவில்லை" என்று குறிப்பிட்ட அறிஞர் அண்ணா அவர்கள், 'இனி கேரோக்களை அனுமதிப்பதில்லையென்று அரசில் சேர்ந்துள்ள எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து முடிவு செய்து, தொழிலதிபர்களிடமும் அதுபோன்று உறுதி மொழியைக் கொடுத்திருக்கிறது' என்பதனை நினைவூட்டினார்.

"அரியானாவில், எதிர்க் கட்சியினரால் எளிதில் விலைக்கு வாங்கக்கூடிய நபர்களை முதலமைச்சர் தமது அமைச்சரவையில் சேர்த்துக் கோண்டிருந்தது சரியல்ல ; அந்த நபர்களைத் தவிர்த்திருக்கலாம்" என்றும் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"ஓர் அமைச்சரவையை 'டிஸ்மிஸ்' செய்யக் கவர்னருக்கு உள்ள அதிகாரங்கள் பற்றி, தலைமை நீதிமன்றத்தின் கருத்தை மத்திய அரசு கேட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும் ; ஆனால், அரசியல் தர்மத்தைப் பொறுத்தவரையில், இப்போது அது இழிநிலைக்குத் தாழ்ந்துவிட்டிருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும்" என்றும் முதலமைச்சர், சுட்டிக்காட்டி விளக்கினார்.

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## காதில் விழுந்தது !

"அரியானா அமைச்சரவை கலைக்கப்பட்டதற்குக் காரணம் என்ன ?"

"அடிக்கடி கட்சி மாற்றங்கள் நடந்து, சனநாயக நடைமுறைமையே பாதித்தது என்பதனால் !"

"வங்காளத்தில் அஜாய் முகர்ஜியைப் பதவி இறக்கிவிட்டு முதலமைச்சராக அமர்த்தப்பட்டிருப்பவர் யார் ?"

"டாக்டர் பி.சி. கோஷ் !"

"பெயர் தெரியும் ; அரசியலில் அவர் எப்படி ?"

"கடந்த நவம்பர் 2-ல் கூட்டணியிலிருந்து கட்சி மாறியவர்."

"அவர் மட்டுமா ?"

"இல்லை ; அவருடன் 17 பேர் கட்சி மாறினார்கள்."

"அரியானாவில் கசந்தது, வங்காளத்தில் எப்படி இனித்தது ?"

"காங்கிரசல்லாத ஆட்சிகள் கவிழ்க்கப்பட வேண்டும் ; இதில் இனிப்பும் கசப்பாகும்—கசப்பும் இனிப்பாகும் !"

## 'டல்ஹவுசி சதுக்கத்தில் தண்டிக்கப்படுவர்'

### 'மீர்ஜாபர்கள்' பற்றி பூபேஷ் குப்தா

"புதுடில்லியிலுள்ள 'கிளைவ்'களாலும், 'வாரன் ஹேஸ்டிங்ஸ்'களாலும் நியமிக்கப்பட்டுள்ள 'மீர்ஜாபர்'கள், கல்கத்தா டல்ஹவுசி சதுக்கத்தில் மக்களால் தண்டிக்கப்பட்டு விடுவார்கள்"

என, வங்காளத்து நிகழ்ச்சி பற்றி மாநிலங்களவையில் பேசுகையில் பூபேஷ் குப்தா குறிப்பிட்டுள்ளார்.

## 'இராம இராஜ்யம்' அல்ல — 'கிராம்' இராஜ்யம்!

"இந்தியாவில் காந்தியடிகள், 'கிராம இராஜ்யம்' நிறுவ ஆசைப்பட்டார் ; ஆனால் காங்கிரசு நிர்வாகங்களோ, 'கிராம்' இராஜ்யங்களைத்தான் உருவாக்கி இருக்கின்றன ; அதாவது, தனி நபர் ஒவ்வொருவருக்கும் 100 கிராம் அரிசி-அதுவும் வரிசையில் நெடுநேரம் நின்றால்தான் !"

—[மைசூர் மாநில ஜனசங்க உறுப்பினர் ஜெகன்னாத ராவ் ஜோஷி, 22—11—67 அன்று மக்களவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசுகையில் குறிப்பிட்டது]

## காலம்-மனிதர்-பதவி !

### ஓர் அரசியல் பாடம்!

'அமைச்சரவை கலைக்கப்பட்டுவிட்டது'—என்ற கவர்னரின் அறிவிப்புக் கடிதத்தை அஜாய் முகர்ஜி பெற்றுக் கொண்ட இடம், கல்கத்தாவில் உள்ள 'கிராண்டு ஓட்டல்'! அங்கு பீகார் முதலமைச்சர் சின்காவுடன் தேநீர் அருந்திக் கொண்டே பேசிக்கொண்டிருந்த போதுதான், 'தேநீர்க் கோப்பையில் புயல்' என்ற ஆங்கில வழக்குக்கு ஏற்றாற் போல் அந்த திடீர்ச் செய்தி வந்தது !

அன்று, கிராண்டு ஓட்டலுக்கு வங்காளத்து முதலமைச்சராக வந்த அஜாய் முகர்ஜி, திரும்பிச் செல்லும்போது ஓர் அரசியல்வாதியாக மட்டுமே இருக்க நேரிட்டுவிட்டது !

பதவி, ஒரு சில நிமிடங்களில் பறிக்கப்பட்டிருந்தது !

தான் ஏறிவந்த அரசாங்கக் காரையும், காரோட்டியையும், அப்படியே அனுப்பிவிட்டு, வேறொரு தனிக் காரில் வீடு திரும்பினார் அஜாய் முகர்ஜி !

★

இப்போது முதலமைச்சராக ஆகியிருக்கும் டாக்டர் பி. சி. கோஷ் பற்றியும் ஒரு சுவையான செய்தி :—

தாம் குடியிருந்த 'இராஜபவன'த்து மாளிகையின் குடியிருப்புப் பகுதி ஒன்றினை, வாடகைக்கு மேலும் இரண்டு மாதம் நீடிக்கக் கோரிய பி. சி. கோஷின் வேண்டுகோளை, 21-ந் தேதி நீக்கம் செய்யப்பட்ட அஜாய் முகர்ஜியின் அமைச்சரவை நிராகரித்துவிட்டது !

"நவம்பர் 21-ந் தேதிக்குமேல் அந்த வீட்டில் கோஷ் நீடிக்கக்கூடாது ; 'சட்டமன்ற உறுப்பினர்' என்ற முறையில் வேண்டுமானால், அவருக்குச் சட்டமன்ற விடுதியில் இடம் தரப்படும்' என்று அவருக்கு அறிவிக்கப்பட்டுவிட்டது !

அரசியல் செய்த விளையாட்டு—அதே 21-ந் தேதியன்று—நிராகரிக்கப்பட்ட கோஷ், முதலமைச்சராகிவிட்டார் !

நிராகரித்த அஜாய் முகர்ஜி, அரசாங்கக் காரையும் அப்படியே விட்டுவிட்டு, வேறொரு தனிக் காரில் வீடு திரும்பியிருக்கிறார் !

## போலீஸ்! போலீஸ்! போலீஸ்!

வங்காளத்துக் கவர்னர் தர்ம வீரா 'தயாரி'த்திருக்கும் 'திடீர்' முதலமைச்சர் டாக்டர் பி.சி. கோஷ், போலீசுப் பின்னணியிலேயே பதவியினைத் துவக்கியிருக்கிறார் !

பதவியேற்ற அடுத்த நிமிடத்தில், முதலில் அவர் சந்தித்த அதிகாரிகள் மாநில போலீசு இன்ஸ்பெக்டர்-ஜெனரல், கல்கத்தா நகரப் போலீசுக் கமிஷனர் ஆகிய இருவர் மட்டுமே !

பிறப்பித்த முதல் உத்தரவு—இ. பி. கோ. 144 பிரிவின் அடிப்படையில் தடையுத்தரவு !

பதவியேற்ற இரவுக்கு மறுதினம், மாநிலத்துக் கலவரங்களை உடனுக்குடன் தெரிந்துகொள்வதற்காக அவர் கணிசமான நேரம் தங்கியிருந்த இடம்—போலீசு கண்ட்ரோல் அறை !

## திருமதி கவிழ்ப்பாளர்!

★

"காங்கிரசுத் தலைவராக இருந்த போதும் சரி—தலைமையமைச்சராக இப்போது இருக்கும்போதும் சரி—மாநில அரசுகளைக் கவிழ்க்கும் காரியத்தில்தான் இந்திரா காந்தி ஈடுபட்டு வந்திருக்கிறார்"



என்று, வலது கம்யூனிஸ்டு உறுப்பினர் பூபேஷ் குப்தா மாநிலங்களவையில் பேசுகையில் சுட்டிக்காட்டினார்.

'இந்திரா காந்தி காங்கிரசுத் தலைவராக இருந்தபோதுதான், 1959-ம் ஆண்டில், இந்தியாவின் முதல் காங்கிரசல்லாத அமைச்சரவை கேரளத்தில் கலைக்கப்பட்டது' என்பது குறிப்பிடத்தக்கது.

## 'முதல் காட்சி'க்கு 'பலி'யான அரியானா முதலமைச்சர்

### பத்திரிகையாளர் படப்பிடிப்பு !

தமது சட்டைப் பையில் இரத்தச் சிவப்பு நிறமுடைய கைக்குட்டையை வெளியே தெரியுமாறு வைத்துக் கொண்டு, வாயில் சிகரெட்டுடன் செய்தியாளர்கள் கூட்டத்துக்கு வந்த அரியானா முன்னாள் முதலமைச்சர் ராவ் வீரேந்திர சிங், அமைச்சரவை கலைக்கப்பட்டது பற்றிய செய்தியை அறிந்தவர்போலக்

(4-ம் பக்கம் பார்க்க)

நம்நாடு

ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ. எம்.பி.

திருவள்ளுவராண்டு 1998 கார்த்திகை 7 (23—11—67) வியாழன்

# அரியானுவில் ஆளுநர் ஆட்சி!

பொதுத் தேர்தலுக்குப் பிறகு காங்கிரசல்லாத அமைச்சரவை அரியானுவில் அமைந்தது; அந்த அமைச்சரவைக்கு ராவ் வீரேந்திர சிங் என்பவர் முதலமைச்சராக இருந்தார்.

'சம்யுக்த தளம்' என்பது அவருடைய கட்சியின் பெயர். அந்தக் கட்சிக்கு ஏதாவது உருப்படியான கொள்கை இருந்திருக்கிறதா என்பதை, அக்கட்சியின் தலைவரால்கூடக் கூறமுடியாது.

வீரேந்திர சிங் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாள் தொட்டு, அந்த ஆட்சியைக் கவிழ்க்க அங்குள்ள காங்கிரசுக் கட்சி தொடர்ந்து முயற்சி செய்து வந்திருக்கிறது. இது போன்றே, அவரை ஆதரித்துவந்தவர்களும்—சொந்த இலாபம் கருதி—தனித்த முறையில் அவரை அச்சுறுத்துவதையே அரசியல் பணியாகக் கொண்டிருந்தனர்.

ஒரு கட்சியின் பெயரால் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதற்குப் பின்னர், வேறு ஒரு கட்சிக்குக் குடிபோகின்ற முறை தவருனது எனக் கண்டித்துவந்தபோதிலும், மற்றக் கட்சிகளைச் சேர்ந்தவர்களைக் காங்கிரசுக்குள் சேர்த்துக்கொள்ளக் காங்கிரசுத் தலைவர்கள் தயங்கியது கிடையாது. மற்றக் கட்சியிலுள்ளவர்களை, காங்கிரசுக் கட்சியில் சேர்த்துக்கொள்ளுமாறு மறைமுகமாகத் தூண்டியும் வந்திருக்கின்றனர், காங்கிரசுத் தலைவர்கள்.

இப்படி மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்களை, அக்கட்சியை விட்டு விலகச்செய்து தங்கள் கட்சியில் சேர்ந்துகொள்ளுமாறு காங்கிரசுத் தலைவர்கள் தூண்டிவருவதற்குக் காரணம் என்ன ?— 'ஆட்சிப் பொறுப்பில் நாமே என்றென்றும் இருந்துவர வேண்டும்' என்ற பேராசைதான் !

இப்பொழுதாவது, அந்தப் பதவி வெறியிலிருந்து அவர்கள் தங்களை விடுவித்துக்கொண்டிருக்கின்ருர்களா என்ருல், அதுதான் இல்லை ; 'எப்பொழுதும் நாமே பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும்' எனத் தாங்கள் கொண்டிருக்கின்ற தீர்மானத்தை, காங்கிரசுத் தலைவர்கள் என்றைக்கும் மாற்றிக்கொள்ளப்போவது கிடையாது !

சிறுத்தை, தன் உடலிலுள்ள கறும் புள்ளிகளை மாற்றிக் கொண்டாலும் கொள்ளும்—'ஆட்சி புரியும் உரிமை நமக்கு மட்டுந்தான் உண்டு' என்ற கொள்கையைக் காங்கிரசுத் தலைவர்கள் என்றென்றும் மாற்றிக்கொள்ளப்போவது கிடையாது.

'நாடாளும் உரிமை நமக்கு மட்டுந்தான் உண்டு' என்ற காங்கிரசுக் கட்சித் தலைவர்களின் முடிவின் விளைவாகத்தான், அரியானுவில் வீரேந்திர சிங்கின் அமைச்சரவை ஒற்றுமையில்லாது உருக்குலைந்துவிட்டது. இதே நிலை, பல கட்சிகளைக் கொண்ட கூட்டு அமைச்சரவை செயல்பட்டுவருகின்ற வேறு சில மாநிலங்களுக்கும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடும்.

அரியானு சட்டமன்றத்தில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 81 ; இதில் மூன்று இடங்கள் காலி ; மீதமுள்ள 78 உறுப்பினர்கள், சரிபகுதியாகப் பிரிந்திருந்தனர். ஆனுல் இந்தச் சரிபகுதி பலத்தை, பின்னர் அமைச்சரவை இழந்துவிட்டது.

அரியானுவில், காலையில் காங்கிரசுக் கட்சி உறுப்பினராக இருப்பவர், நடுப்பகலில், ஆளுங்கட்சியான சம்யுக்த தளத்தில் சேர்ந்துவிட்டதாக அறிவிப்பார் ; இந்த நிகழ்ச்சி அன்று மாலை செய்தித்தாள்களில் பிரசுரமாவதற்குள், அதே உறுப்பினர் மீண்டும் காங்கிரசுக் கட்சிக்குத் திரும்பிவிடுவார் ; ஒரே உறுப்பினர், எட்டு—பத்து மணி நேரத்திற்குள் கட்சி மாறிய செய்தியை ஒன்றன்பின் ஒன்ருக ஒரே நாளில் செய்தித்தாள்கள் வெளியிட்டிருக்கும்.

காலையில் பெரும்பான்மையுடன் விளங்கக்கூடிய முதலமைச்சர் வீரேந்திர சிங்கின் சம்யுக்த தளம், மாலைக்குள் சிறுபான்மைக் கட்சியாகிவிடும் ; அதே நேரத்தில், காங்கிரசுக் கட்சியின் எண்ணிக்கை கூடிவிடும். இந்த நிலை, இருபத்திநான்கு மணி நேரம் வரையில் தொடர்ந்து இருப்பதில்லை ; மீண்டும் காங்கிரசுக் கட்சியின் பலம் குறைந்து சம்யுக்த தளத்தின் பலம் கூடும்.

இவ்வாறு, தேய்பிறையாகவும் வளர்பிறையாகவும் வீரேந்திர சிங்கின் அமைச்சரவை அரியானுவில் செயல்பட்டுக் கொண்டிருந்தது ; எந்த நேரத்திலும் கவிழ்ந்துவிடக்கூடிய அபாயத்தை எதிர்நோக்கிக் கொண்டு, அப்படிக் கவிழ்ந்துவிடாமல் காப்பாற்றிக் கொள்ளுவதற்கான முயற்சிகளில் எப்பொழுதும் முயற்சித்துக் கொண்டே இருந்து தீரவேண்டிய கட்டாயத்தில் வீரேந்திர சிங் அமைச்சரவை தள்ளப்பட்டுக்கிடந்தது. இக்கட்டாயத்தைத் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டுவந்திருப்பதில், அங்குள்ள காங்கிரசுக் கட்சிக்கும், அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைமைக்கும் பெரும் பங்கு உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

அமைச்சரவையை வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றிக்கொள்வதற்காக, அமைச்சர்களின் எண்ணிக்கையைக் கூட்டிக்கொண்டே இருந்தார்—வீரேந்திர சிங். தம்மை ஆதரித்த 41 பேரில் 23 பேரை அமைச்சர்களாக ஆக்கி இருந்தார் ; 40 பேரில் 24 பேரை அமைச்சர்களாக ஆக்கி இருந்தார்.

ஆளும் கட்சியான சம்யுக்த தளத்தைச் சேர்ந்த பத்து உறுப்பினர்களில் ஒருவர்கூட அமைச்சர்களாக இல்லை ; அந்தப் பத்துப் பேர் போக, சம்யுக்த தளத்திலிருந்த 30 உறுப்பினர்களில் 22 பேர், வீரேந்திர சிங் அமைச்சரவையில் அமைச்சர்களாகவும், பார்லிமெண்டரி செயலாளர்களாகவும் இடம் பெற்றிருந்தனர் என்பது வேதனை கலந்த வியப்பாகும்.

'எந்த நேரத்திலும் வீழ்ச்சி ஏற்படக்கூடும்' என்ற அச்சத்துடன் இருக்கின்ற ஆட்சியில், நிர்வாகச் சீர்குலைவு ஏற்படத்தான் செய்யும். அத்தகைய ஆட்சியில் செம்மையான நிர்வாகத்தை எதிர்பார்ப்பது, பேதமையிலும் பேதமையாகும்.

செம்மையான நிர்வாகத்தில் கருத்தைச் செலுத்தமுடியாமல், ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ளுவதிலேயே தமது முழுக் கவனத்தையும், உழைப்பையும் செலவழித்துவந்த வீரேந்திர சிங் அமைச்சரவையை இறுதியாகக் குடியரசுத் தலைவர் கலைத்துவிட்டார். ஆளுநரின் நேரடி ஆட்சியில், அரியானு ஆட்சியை ஏற்றுக் கொண்டுவிட்டார் !

இப்படித் தமது அமைச்சரவையைக் குடியரசுத் தலைவர் கலைத்துவிட்டதை எதிர்த்து வழக்குத் தொடரப்போவதாக முதலமைச்சராக இருந்துவந்த வீரேந்திர சிங் அறிவித்திருக்கின்ருர் ; அதன் முடிவு, எப்படி இருந்தாலும் இருந்து போகட்டும்.

இப்படிக் குடியரசுத் தலைவர் அமைச்சரவை கலைக்கப்படுவதற்கு முன்னரே வீரேந்திர சிங், தம்மிச்சையாக அமைச்சரவைப் பொறுப்பைவிட்டு விலகி, மறு தேர்தலைக் கோரியிருக்கவேண்டும் ; அப்படி அவர் செயல்பட்டிருக்கும்பட்சத்தில், அவருடைய செயலை அரியானு மக்கள் ஆதரித்துவந்திருப்பர் ; ஆனுல், அவர் அதைச் செய்யவில்லை.

குடியரசுத் தலைவராவது, அமைச்சரவையை வீட்டுக்கு அனுப்புவதற்குமுன் சட்டமன்றத்தைக் கூட்டி, 'வீரேந்திர சிங்கின் அமைச்சரவைக்குச் சட்டமன்றத்தில் பெரும்பான்மை இருக்கிறதா' என்று கண்டறிந்திருக்க வேண்டும் ; அதைச் செய்யக் குடியரசுத் தலைவர் தவறிவிட்டிருப்பது வருந்தத்தக்கதாகும்.

அரியானுவில் சம்யுக்த தள அமைச்சரவையை வெளியேற்றிவிட்டதுடன், நான்கு முதல் ஆறு மாதங்களுக்குள்ளாகப் பொதுத் தேர்தலுக்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது ; அப்பொழுதாவது அரியானு மக்கள், தங்களுக்கு விருப்பமான ஆட்சியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவார்கள் என நம்புவோமாக !

—கா. க.

## சென்னைத் தொலைபேசி அட்டவணை

### தமிழில் வெளியாகிறது

புதுடில்லி, நவ. 22—

தமிழ் மொழியில் சென்னை மாவட்டத் தொலைபேசி அட்டவணை (டைரக்டரி) இன்னும் சில வாரத்தில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"குசராத், இந்தி ஆகிய மொழிகளில் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன ; எனவே, தமிழ் மொழியிலும் இதேபோல் வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன" என்று நாடாளுமன்ற மேலவையில், செய்தித் தொடர்பு அமைச்சர் குஜரால் சொன்னுர்.

## அதிக விலை கேட்குமாறு விவசாயிகளைக் காமராசர் தூண்டுவதேன்?

### மக்களவையில் வெ.கிருஷ்ணமூர்த்தி எழுப்பிய வினு

### 'தமிழக அரசின் கொள்முதல் விலை சரியானதே' என அமைச்சர் பதில்

புதுடில்லி, நவ. 21—

'நெல் கொள்முதல் விலையை உயர்த்தவேண்டும் எனக் கோரி விவசாயிகள் போராட்டம் நடத்தவேண்டும்' என, அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர் கூறுவது பற்றிய பிரச்சினை ஒன்றை, மக்களவையில், கேள்வி நேரத்தின்போது, தி. மு. க. உறுப்பினர் வெ. கிருஷ்ணமூர்த்தி எழுப்பினுர்.

"மத்திய அரசு கூறியதுபோல் நெல் கொள்முதல் விலையைத் தமிழக அரசு நிர்ணயித்திருக்கிறது ; இந்த நிலையில் விலையை உயர்த்தக் கோரிப் போராட்டம் நடத்துமாறு விவசாயிகளைக் காமராசர் தூண்டிவிடுவது சரியா?" என்று கிருஷ்ணமூர்த்தி கேட்டார்.

இதற்கு உணவுத்துறைத் துணையமைச்சர் ஏ. பி. ஷிண்டே பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"நெல் கொள்முதல் விலையை நிர்ணயிப்பதில் தமிழக அரசு மிகவும் நியாயமாக நடந்துகொண்டுள்ளது.

"மத்திய அரசும்—மாநில அரசும் கலந்து பேசிய பிறகே நெல் கொள்முதல் விலைகள் நிர்ணயிக்கப்பட்டன.

"நெல் உற்பத்தியாளர்கள், பயன்படுத்துவோர் ஆகிய இரு தரப்பினரின் நலனையும் பாது காக்கும் முறையிலேயே தமிழக அரசு நடந்துகொண்டுள்ளது."

வெ. கிருஷ்ணமூர்த்தி :—"காங்கிரசுக் கட்சித் தலைவரின் போக்கு சரியா? இதற்கு அமைச்சர் நேரிடையாகப் பதில் சொல்லவேண்டும்."

அவைத் தலைவர் :—"காங்கிரசுக் கட்சித் தலைவரின் சார்பில் அமைச்சர் எவ்வாறு பதில் சொல்ல முடியும் ?"

வெ. கிருஷ்ணமூர்த்தி:—"அமைச்சரும்—தலைவரும் ஒரே கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பதால்தான், 'தலைவரின் போக்கு சரியா ?' என்று அமைச்சரின் கருத்தை அறிய விரும்பினேன்."

இதன் பின்னர், 'பற்ருக்குறை மாநிலங்களிலும், உபரி மாநிலங்களிலும் உணவுத் தானியங்களுக்கு ஒரேமாதிரி விலையை நிர்ணயிகக வேண்டும்' என்று ஆளுங் கட்சி உறுபபினர்களும்—எதிர்க் கட்சி உறுப்பினர்களும் வெளியிட்ட கோரிக்கையை உணவு அமைச்சர் செகசீவன்ராம் ஏற்க மறுத்தார்.

## சனநாயகம் மேலும் ஒளியுடன் விளங்க...!

### மக்கள் தீர்ப்பை தலைவர்கள் உணர்ந்து நடக்க வேண்டும்

"சனநாயகத்தைப் பொறுத்தவரையில் இந்த நாட்டில் நல்ல எதிர்காலம் இருப்பதாகவே நான் நினைக்கிறேன். சனநாயகத்திற்கு ஏதோ பேராபத்து ஏற்பட்டுவிட்டதாக—ஒரு சில நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு—கூறுகிருர்கள் ; ஆனுல், உண்மையில் அப்படிப்பட்ட பேராபத்து ஏதுமில்லை !

"இவ்வளவு பெரிய நாட்டில் மூன்று பொதுத்தேர்தல்களை மிக்க அமைதியுடனும் வெற்றியுடனும் நடத்தியிருக்கிருேம் ; இத்தனைக்கும் நமது நாட்டு மக்கள் பல்கலைக் கழகம் சென்று படித்தவர்கள் அல்லர் ; பிற நாடுகளில், தேர்தலின்போது ஏற்படும் இரத்தக்களரிகள் இல்லாமல் மூன்று தேர்தல்களை முடித்திருக்கிருேம் !

"அமைதி குலையாமல்—சட்டம் சீர்கேடு அடையாமல் ஆட்சி மாற்றத்தையே செய்யும் அளவிற்கு மக்களின் மனத்தில் சனநாயகப் பண்பு ப்டிந்துவிட்டது !

"சனநாயகத்திற்கு மக்களால் எந்தவித ஆபத்துமில்லை ; இருக்கின்ற குறையே அங்கே (தலைவர்களிடம்)தான் இருக்கிறது ; மக்களிடம் எந்தவிதமான குறையும் இல்லை ! அப்படி மக்களிடம் ஏதாவது குறை இருந்தால் திருத்திவிடலாம் ; ஆனுல், தலைவர்கள் தாங்களாகத் திருந்தினுலொழிய அவர்களைத் திருத்துவதற்கு வழியில்லை !

"அந்தத் தலைவர்களைத் திருத்துவதற்குத்தான் மக்கள், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை முயற்சி எடுக்கிருர்கள்—தேர்தலின் மூலம் !

"ஆனுல் அந்தத் தலைவர்கள், ஒருமுறை மக்கள் தந்த பாடத்தின் மூலம் திருந்துவார்களா அல்லது இரண்டு முறை பாடம் புகட்டினுல்தான் திருந்துவார்களா என்பது தெரியவில்லை !

"மக்களிடம் பாடம்பெற்றும் திருந்தாத தலைவர்கள் யார் என்று நாம் கூறத் தேவையில்லை ! அந்தத் தலைவர்கள் மக்களின் தீர்ப்பை உணர்ந்து நடக்கத் தொடங்கினுல். சனநாயகம் இன்னும் ஒளியுடன் விளங்கும் !"

—அறிஞர் அண்ணு

(திரைப்படத் துறையினர் மாறனுக்கு நடத்திய பாராட்டு விழாவில்)

## ஷேக் அப்துல்லா விடுதலைப் பிரச்சினை

### காங்கிரசாரே வற்புறுத்தல்

புதுடில்லி, நவ. 21—

ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்ய வேண்டுமென்று ஆளும் கட்சியிலுள்ளவர்கள், தலைமையமைச்சரை நிர்ப்பந்திப்பது வலுக்கிறது ; இது, நடப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் வெளியே தலைநீட்டக்கூடும்.

"ஷேக் அப்துல்லாவைத் தேவைக்கு அதிகமாக நீண்ட நாட்கள் சிறையில் வைத்திருப்பது பயனற்றது" என்பதை இந்திரா உணருகிருர்.

"விடுதலையடைந்து அரசியலில் தீவிரமாக உழைக்கும் அப்துல்லாவைவிடக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அப்துல்லாவினுல் பொறுப்பு மிகுதியாகிறது" என்று மூத்த காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர் சிலரும் கருதுகின்றனர்.

## சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவச மருத்துவ வசதி

போபால், நவ. 21—

மத்தியப் பிரதேச மாநிலத்தில் இனி அரசாங்க மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்கள், இலவச மருத்துவ வசதி பெறுவர்.

மத்தியப் பிரதேச சட்டமன்ற உறுப்பினர்கள் (சம்பளம்—அலவன்சு) சட்டம் இதற்கான வகையில் திருத்தப்படுகிறது.

பல்கலைக் கழகப் பட்டதாரிகளே !

# நாட்டின் எதிர்காலத்தை எழில்மிக்கதாக்குவீர்!

## சாமானியர் எதிர்காலத்தைச் சிறப்புள்ளதாக்க முனைவீர்!

"பல்கலைக் கழகப் பட்டதாரிகளே ! சாதாரண மனிதனை—கீழ்த்தட்டு மனிதனை உயர்த்தும் பணியில் நீங்கள் எங்கிருந்தாலும் ஈடுபட வேண்டும் ; அந்த மனிதன்தான் இந்த நாட்டிலும் பிற நாடுகளிலும் முதுகெலும்பாய் இருப்பவன் ! அந்த மனிதனின் ஓவியத்தை உங்கள்முன் சமர்ப்பிக்கிறேன்—

**"அவன், நம்புவதற்கு முடியாத நிலையில் வாழ்பவன் ; ஆனால் மனித குலத்தின் மூன்றில் இரண்டு பகுதியாக இருப்பவன் !**

**"குடிசையில் அவன் வாழ்கிறான் ; அவனால் எழுதவோ படிக்கவோ முடியாது !**

**"அவனது சக்தி நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறது ! ஆனால் ஒரு நாளைக்கு 15 மணி நேரம் வேலை செய்கிறான் ! அவன் வயலில்தான் வேலை செய்கிறான்—ஆனால் அந்த வயல் அவனுக்குச் சொந்தமில்லை. அவனும் அவனது குடும்பமும் பசியோடுதான் இருக்கிறார்கள் ; இளம் வயதிலேயே அவன் இறந்துவிடுகிறான் ; ஆனாலும் அவன் தனது குழந்தைகளைப்பற்றி நம்பிக்கை கொண்டிருக்கிறான் ; அவர்கள் வலிமையுடனும் உடல் உறுதியுடனும் இருக்க விரும்புகிறான் ; அவர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இருக்க விரும்புகிறான் ; சமாதான உலகில் தனி மனித உரிமையுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகிறான் ; இத்தகையவன்தான் (கீழ்த்தட்டு) சாமான்ய மனிதன் !"**

"இந்த மனிதன், தனக்கு இழைக்கப்படும் அநீதியை உணர்ந்துகொள்ளத் துவங்கிவிட்டான் ! அதன் விளைவாகக் கிளர்ச்சிகளும், மோதல்களும் ஏற்படுகின்றன !

"பல நாடுகளில் அவனது நிலையை உயர்த்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன !

"'நாங்கள் பின்தங்கப்போவதில்லை ; நமது சாமானிய மனிதனை இடர்ப்பாடான நிலையில் விட்டுச் செல்லப்போவதில்லை' என்று இங்கேயே - இப்போதே உறுதி எடுத்துக்கொள்ளுங்கள் !

"அடிப்படை பலவீனமாயிருந்தால் மகுடமும் இருளில் கவிழும்! கண்ணியமிக்க பரம்பரையின் வழித்தோன்றல்களாகிய நீங்கள்தான் இந்த உன்னதமான பணிக்கு மிகவும் பொருத்தமானவர்கள் ! இந்தப் பணியில் நீங்கள் காணும் வெற்றியில்தான் இந்த நாட்டின் எதிர்காலமே இருக்கிறது !"

**--அறிஞர் அண்ணா**

(அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா உரையில்)

# கலையும் அரசியலும் !

சென்னை, நவ. 20—

"'கலை உலகத்தில் உள்ளவர்கள் அரசியலுக்கு வரலாமா?' என்ற வாதம் இப்பொழுது எழுப்பப்படுகிறது.

'அரசியல் என்பதே ஒரு கலைதான்' என்பது அறிஞர்கள் கண்ட முடிவு !

'அரசியல் ஒரு கலையா ? அல்லது வெறும் கருத்துக் குவியலா?' என்று ஆராய்ந்த பேரறிஞர்கள், 'அரசியல் என்பது, கருத்துக் குவியல்களின்வழி மக்களைத் திருப்பி, அவர்களைத் திருத்தும் ஒரு கலை' என்றே முடிவு கட்டியிருக்கிறார்கள் !

"'கலை' என்பது—மக்களைக் கட்டியாளுவது ; 'அரசியல்' என்பது—மக்களைக் கட்டியாண்டு திருத்துவது !

"'கலை' என்பது—நிழல் உருவில் இருப்பது ! அரசியல் என்பது—உண்மை உருவத்தில் இருப்பது !

"'கலை' என்பது — உடனடித் தேவைகளுக்காக இயங்குவது ! அரசியல் என்பது—நீண்ட காலத் தேவைகளுக்காக இயங்குவது !

"ஆகவே, கலையும் அரசியலும் பின்னிப் பிணைந்தவை ! இதை உணர்ந்தபிறகும், 'கலையில் அரசியல் வரலாமா ? அரசியலில் கலை புகலாமா?' என்று கேட்பது, 18-வது நூற்றுண்டின் கருத்தாகத்தான் இருக்கமுடியும் !

"நாம் அறிந்த அரசியல் தலைவர்களின் கலை ஈடுபாடு கண்டு நாம் இதனைத் தெளியவேண்டும்; இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற வேளையிலுங்கூட —ஓய்வு கிடைக்கும்போது— வின்ஸ்டன் சர்ச்சில், திரைப் படங்களைப் பார்த்து ரசித்திருக்கிறார் ! உலகத்தின் மிகச் சிறந்த அரசியல்வாதியான ஆபிரகாம் லிங்கன், நாடகம் பார்த்துக் கொண்டிருந்த போதுதான் சுட்டுக் கொல்லப்பட்டார்! பண்டித நேரு இங்கிலாந்து செல்கிற போதெல்லாம், அங்கு நடக்கும் புகழ்மிக்க நாடகங்களைப் பார்ப்பது வழக்கம் ! தமிழகத்தில் அரசியல் உணர்வை யூட்டிய சத்தியமூர்த்தி அவர்களுக்கு சங்கீதம்—நடனம் ஆகியவற்றில் பெருவிருப்பம் இருந்ததோடு -- நாடகத்தில் அக்கறை கொண்டதோடு சில நாடகங்களில் பங்கேற்று வேடமும் தாங்கியிருக்கிறார்.

"ஆகவே, 'கலையும் அரசியலும் இணையக்கூடாது' என்பது சரியல்ல ! கலையிலும் அரசியலிலும் சரியானபடி இருக்க இயலாதவர்கள்தான் அப்படிக் கூறுவார்கள் !

"'கலை' என்பது—மக்களின் மனதில் நெகிழ்ச்சி ஏற்படுத்துவதாகும் ; எந்த நாட்டிலுமில்லாத முறையில் தமிழகத்தில் நெகிழ்ச்சியை உருவாக்க எடுத்துக் கொள்ளும் முயற்சி குறைவானது.

அதிக முயற்சி இல்லாமல் தமிழக மாந்தர் நெஞ்சில் நெகிழ்ச்சியை ஏற்படுத்திவிட முடியும் ; அதற்குக் காரணம், நெகிழ்ச்சி என்ற சொல்லில் சிறப்பு 'ழ'கரம் இருக்கிறது !

தமிழிலிருந்து பல நாட்டவர்கள் எதை எதையோ எடுத்துக் கொண்டனர் ; பரத நாட்டியத்தைக் கற்றுக்கொண்டனர் ; ஆனால், அந்த 'ழ'வை மட்டும் எடுத்துகொள்ள முடியவில்லை ! அத்தகையச் சிறப்புடன் 'ழ'கரம் இருக்கிற காரணத்தால், தமிழகத்துக் கலை மிக விரைவில் நெகிழ்ச்சியை ஏற்படுத்திவிடுகிறது !

"மனம் நெகிழச் செய்வது கலை ! நெகிழ்ந்த மனம் நெகிழ்ந்து கொண்டே போனாலும் பயனில்லை ! நெகிழாமல் இருந்தாலும் தவறு !

"ஆகவே, மனம் நெகிழவேண்டும்—கலையால் ! அப்படி நெகிழ்ந்ததை வழிப்படுத்துவது -- பயன்பெறச் செய்வது அரசியல் !

உள்ளத்தை நெகிழச் செய்யும் திறன் படைத்த கலைஞர்களிடமே, நெகிழ்ந்த உள்ளத்தை வழிப்படுத்தும் அரசியலும் இருந்தால் தவறு இல்லை ! 'தவறு இல்லை' என்பது மட்டுமல்ல— பொருத்தமிருக்கிறது -- பொருளுமிருக்கிறது ! இந்தக் கருத்துக்களை உலகம் உணர்ந்து நடக்கும் காலம் கனிந்துவருகிறது !"

**--அறிஞர் அண்ணா**

(திரைப்பட அதிபர்கள் முரசொலி மாறனுக்கு நடத்திய பாராட்டு விழாவில்.)

# 'தண்ணீருக்குப் பதில் அரிசி தாருங்கள்'

## 'ஒகனேகல் திட்டம் பற்றிப் பேச்சு நடத்த வருக'

### அண்ணாவிடம் நிஜலிங்கப்பா வேண்டுகோள்

சென்னை, நவ. 22—

"தமிழகத்திற்கு, மைசூர் மாநிலம் நீர் கொடுக்கிறது ; அதே நேரத்தில், நீங்களும் எங்களுக்கு அரிசி கொடுக்க வேண்டும் என்று இப்பொழுதே உங்கள் முதலமைச்சர் அண்ணா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் ; எங்களுக்கு அரிசி வேண்டியபொழுதெல்லாம் கொடுத்து உதவிபுரிய அவர் முன்வருவார் என்று நம்புகிறேன் ; நான் அதற்குப் பதிலாகப் பாசனத்திற்கு வேண்டிய தண்ணீரைத் தருகிறேன்"

என்று மைசூர் மாநில முதலமைச்சர் திரு. நிஜலிங்கப்பா, நேற்று, நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்றத்தின் 280-வது ஆண்டு விழாவில், மாநகராட்சியின் வரவேற்பைப் பெற்றுக்கொண்டு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

விழாவில், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும், அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், எஸ் ஜே. சாதிக் பாட்சா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த விழாவினையொட்டி, மாநகராட்சி ஊழியர்களின் விளையாட்டுப் போட்டிகளும், மாநகராட்சி உறுப்பினர்கள் பங்கேற்ற மாறு வேடப் போட்டிகளும் நடைபெற்றன.

போட்டிப் பந்தயங்களில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி இராணி - அண்ணாதுரை பரிசு வழங்கினார்கள்.

## அறிஞர் அண்ணா

அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழகத்தின் நெல் விளைச்சல் பெருகியிருப்பதற்கு முழுக்க முழுக்கக் காரணமாக இருப்பவர், மைசூர் முதலமைச்சர் நிஜலிங்கப்பா ஆவார்கள். அவருடைய நல்லெண்ணத்தின் விளைவாகக் கிடைக்கின்ற காவிரியாற்று நீர்தான் நமக்கு வளத்தைக் கொடுக்கிறது.

இந்தியாவில் ஒரு மாநிலத்திற்கும் — இன்னொரு மாநிலத்திற்கும் இடையே எல்லைகள் பற்றியும், ஆற்றுநீர்ப் பங்கீடு பற்றியும் தகராறுகள் மலிந்துள்ள இந்தக் காலத்தில், மைசூருக்கும்—தமிழகத்திற்கும் எந்தவிதமான தகராறுகளும் இல்லை. எல்லா வகையிலும் தமிழகத்திற்கும் மைசூருக்கும் தோழமைத் தொடர்பு நிரம்ப இருக்கிறது."

## நிஜலிங்கப்பா

திரு. நிஜலிங்கப்பா, மேயர் இரா. சம்பந்தம் படித்தளித்த வரவேற்பைப் பெற்றுக்கொண்டு பேசுகையில் மேலும் கூறியதாவது :—

"ஒகனேகல் நீர் விசைத் திட்டம் பற்றித் தமிழக அரசுடன் பேச்சு நடத்த நான் ஆவல் கொண்டுள்ளேன் ; புதிய தி.மு.க. ஆட்சி இதுபற்றிப் பேச்சு நடத்த முன்வரவேண்டும்.

மறைந்துகிடக்கின்ற இயற்கை வளத்தைப் பயன்படுத்திக் கொள்வதுபற்றி நாங்கள் முன்பு விவாதித்திருக்கிறோம். ஒகனேகல் நீர் விசைத் திட்டத்தை நம்முடைய நலனுக்குப் பயன்படுத்திக் கொள்வது தொடர்பாக விவாதிக்க வேண்டும்."

# தொழிலாளர்கள் குடும்பங்களுக்கும் மருத்துவ வசதி

## அரசாங்க இன்சூரன்சுத் திட்டத்தில் புதிய சலுகை

சென்னை, நவ. 21—

தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்சூரன்சுத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் மருத்துவ உதவி, சென்னை நகரிலும் புறநகர்ப் பகுதிகளிலும் இப்பொழுது இன்சூர் செய்த தொழிலாளர்க்கு மட்டும்தான் கிடைக்கிறது; ஆனால் நவம்பர் 27-ம் நாள்முதல் இந்த உதவி, இந்த இடங்களிலுள்ள இன்சூர் செய்த நபர்களின் குடும்பத்தினருக்கும் கிடைக்கும்.

இதன்படி, அரசாங்க இன்சூரன்சு மருந்தகங்களில் சிகிச்சை உட்பட சிறப்புத் திறமை அல்லது அனுபவம் தேவைப்படாத சிகிச்சை—அம்மை ஊசி குத்துவது—அவசியமான மருந்துகளை இலவசமாகத் தருவது—அவசியம் இருந்தால் வீட்டுக்கு வந்து டாக்டர் கவனிப்பது—ஆகிய பொது மருத்துவ வசதி செய்து தரப்படும்.

அத்துடன், இன்சூர் செய்த நபரின் மனைவிக்குப் பேறுகால வைத்திய உதவி இலவசமாகக் கிடைக்கும். அரசாங்க இன்சூரன்சு மருந்தகத்தில் சிகிச்சை–கருவுற்றிருக்கும்பொழுது வீட்டில் பேறுகால உதவியாளரின் கவனிப்பு ஆகியவை இருக்கும்.

மேலும், அவசியம் நேர்ந்தால், நோயாளியை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல இலவச ஆம்புலன்சு வசதி கிடைக்கும். வல்லுநர் ஆலோசனை, சிறப்பு ஆய்வு ஆகியவற்றுக்கும் வகை செய்யப்படும்.

சென்னையிலுள்ள அரசாங்க இன்சூரன்சு மருத்துவமனையில் மட்டுமல்லாது, மற்ற அரசினர் மருத்துவமனைகளிலும் நோயாளிகளையும், மகப்பேற்றுக்கு வரும் தாய்மார்களையும் சேர்த்துக் கொள்ள இந்தத் திட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காச நோயாளிகளுக்குப் படுக்கை வசதிகள் குறைவாக இருப்பதால், அவர்களை வீட்டில் வைத்தே சிகிச்சையளிக்க வகை செய்யப்படும்.

சுருங்கச் சொன்னால், இன்சூரன்சு செய்த நபரின் குடும்பத்தைச் சேர்ந்த பொதுவான நோயாளிகளுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும் மருத்துவமனையில் சேர்த்துச் சிகிச்சையளிப்பது உட்பட முழு மருத்துவ உதவி கிடைக்கும்; காச நோயாளிகளைப் பொறுத்து அவர்களை மருத்துவமனையில் சேர்ப்பது தவிர, வீட்டில் சென்று கவனிப்பது—சிகிச்சையளிப்பது உட்பட முழு மருத்துவ உதவி கிடைக்கும்.

# சிங்கப்பூர் தி.மு.க. பற்றி இந்திரா!

## நாடாளுமன்றத்தில் விளக்கம்

புதுடில்லி, நவ. 21—

"'தமிழ்நாட்டில் உள்ள தி.மு. கழகத்துக்கும் – சிங்கப்பூரில் இயங்கும் தி. மு. கழகத்துக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை' என்று, சிங்கப்பூர் சென்ற தமிழ்நாட்டு தி. மு. கழகத் தலைவர்கள் கூறியிருக்கின்றனர்.

"மலேசியாவுக்கும் — சிங்கப்பூருக்கும் சென்ற தி. மு. கழகத் தலைவர்கள், அங்கு உள்ள ; தமிழர்களை, அந்த நாட்டுக்கு விசுவாசமாக நடந்துகொள்ளுமாறு கேட்டுக் கொண்டிருப்பதாகவும் இந்த அரசுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது"

என்று தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி, நாடாளுமன்ற மேலவையில் என். ஆர். முனுசாமி கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

# கேரள அரசு வாங்கிய ஆடம்பரக் கார்!

ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கார்களை அரசாங்க வணிகக் கழகம் அண்மையில் ஏலம் விட்டபோது, கேரள அரசு, ஒரு பெரிய ஆடம்பரக் காரை வாங்கியுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட 'செவர்லே-இம்பாலா' கார் இது; 'ஏர் கண்டிஷன்டு' வசதி செய்யப்பட்டது,

இக்கார் தற்போது இரயில் மூலம் திருவனந்தபுரத்திற்குக் கொண்டு செல்லப்படும்; இதற்கு மட்டும் ரூ. 1,000 செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கேரள முதலமைச்சர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு பயன்படுத்தும் பொருட்டு இக்கார் வாங்கப்பட்டுள்ளது.

டிசம்பர் முதல் தேதியன்று நம்பூதிரிபாடு, அரசாங்க வேலையாகப் புதுடில்லிக்கு வருகிறார். திரும்பிப் போகும்போது அவர் இக்காரில் போனால், 'அரசுக்குச் செலவு குறையுமே' என யோசனை கூறப்பட்டது; ஆனால் இந்த யோசனை ஏற்கப்படவில்லை.

# டில்லியின் 'அரசியல் தர்மம்'!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"எந்த ஒரு மாநிலத்திலாவது, சட்டம்—அமைதியைப் பாதுகாக்க இயலாமல் போய்விட்டிருப்பதாகக் குடியரசுத் தலைவர் கருதினால் அந்த நிமிடத்திலேயே அமைச்சரவையை 'டிஸ்மிஸ்' செய்துவிட முடியும்; அந்த அதிகாரம் தீவிரமானதா அல்லது மிதமானதா?'—சமஷ்டிக் கொள்கைக்கு ஒத்துவரக் கூடியதா?—அது, சனநாயகத்திற்கு ஏற்றதுதானா அல்லது எதேச்சாதிகாரத்திற்கு உரிய ஒன்று?—என்பதைத் தீர்மானிக்க வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது" என்றும் அண்ணா அவர்கள் வலியுறுத்திக் கூறினார். அவர் ஆற்றிய உரை வருமாறு:—

மேற்கு வங்க அரசு டில்லியிலுள்ள மத்திய அரசினால் கலைக்கப்பட்டது பற்றி என்னிடம் கருத்து கேட்கப்பட்டது; நான் அதற்குப் பதில் தரும் வகையில், 'அந்தச் செயல் அரசியல் சட்டப்படியும் தவறானது—அரசியல் சித்தாந்தப்படியும் தவறானது—நெறி முறைகளின்படியும் தவறானது' என்றேன்.

'மேற்கு வங்க அரசு கலைக்கப்பட்டது' என்ற செய்தியைக் கேட்டு நான் ஏமாற்றமடையவுமில்லை—அதிருப்தி அடையவும் இல்லை; ஏனெனில், டில்லியின் போக்கை நான் உணர்ந்திருக்கிறேன்.

இந்தச் செயல், உலகுக்கு எதைக் காட்டுகிறது? 'இந்தியாவில் சனநாயகம் உயிர் வாழ்வதற்காகப் போராட வேண்டிய நிலையில்தான் இருக்கிறது' என்பதைக் காட்டுகிறது!

'இந்தியாவில் சனநாயகம் இன்னும் பலவீனமான நிலையில் இருக்கிறது' என்பதைத்தான், மக்கள் ஆதரவைப் பெற்ற மேற்கு வங்க அரசு கவிழ்க்கப்பட்டது நமக்கு உணர்த்துகிறது!

## சந்தைச் சதுக்கம் வந்தாகவேண்டும்!

மேற்கு வங்கத்தில் புதிய அமைச்சரவை பொறுப்பேற்றிருக்கிறது; அது எவ்வளவு காலம் வாழப்போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அங்கு அந்த அமைச்சரவையும் கவிழ்ந்தால், குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படலாம்!

அந்த ஆட்சிதான் எவ்வளவு காலத்திற்கு நிலைத்துவிட முடியும்? ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடம் இருக்கலாம்; அதற்குப்பிறகு மக்களிடம் வந்துதானே ஆகவேண்டும்? அவர்களுடைய கொள்கைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் தீர்ப்புப் பெறுவதற்கு சந்தைச் சதுக்கத்திற்கு அவர்கள் வந்துதானே ஆகவேண்டும்?

## வெட்கித் தலைகுனிய நேரிட்டிருக்குமே!

நான் வங்கத்தில் இருந்திருந்தால் என்ன செய்திருப்பேன்? 'சரி; வரட்டும் மற்றொரு அமைச்சரவை' என்று விடுவதோடு, 'மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை அந்த அரசு தர வேண்டும்' என்றும் வலியுறுத்தியிருப்பேன்; 'அதற்கு உன் ஒத்துழைப்பு வேண்டும்' என்று அவர்கள் கேட்பார்கள்; 'என் ஒத்துழைப்பு உனக்கு ஏன்? மக்களுக்குச் சரிவர உணவு முதலிய தேவைகளைத் தரமுடியாத நீங்கள், மக்களின் ஆதரவு பெற்ற அஜாய் முகர்ஜி அமைச்சரவையைத் தூக்கி எறிந்துவிட்டு, கோஷ் அமைச்சரவையைக் கொண்டுவந்தது ஏன்? இதுதான் சனநாயகமா?' என்று டில்லி அரசு வெட்கித் தலைகுனியும்படியாகக் கேட்பேன்!

## இதில் எது உண்மை?

இப்போது, 'சனநாயகம்' என்ற சொல், பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது; மேற்கு வங்கத்தில் அரசு கலைக்கப்பட்டதைப் பற்றி அரசியல் தலைவர்கள், 'சனநாயகம் கொலை செய்யப்பட்டுவிட்டது' என்று கூறுகிறார்கள்; ஆனால், கலைப்பதற்கு உத்தரவிட்டவர்கள், 'சனநாயகத்தைக் காப்பாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது' என்று கூறுகிறார்கள்.

ஆகவே, 'இதில் எது உண்மை—எது சனநாயகச் செயல்' என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்!

## கருத்து புரியாதா?

'மேற்கு வங்கத்திலும் அரியானாவிலும் நடத்தப்பட்ட செயல்களுக்கு யார் பொறுப்பானவர்கள்—யார் தவறு செய்தவர்கள்' என்று என்னிடம் கேட்கப்பட்டது; நான் கூறினேன்—'இருதரப்பிலும் சரியான செயல்களும் இருக்கின்றன; இருதரப்பிலும் தவறுகளும் இருக்கின்றன' என்று! இது வேடிக்கையான கருத்தாக இருக்கலாம்; கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால் அதிலுள்ள கருத்து புரியும்!

## தவறு தவறுதான்!

டில்லிப் பேரரசு காங்கிரசல்லாத அரசுகளைக் கவிழ்க்க முயற்சி எடுத்தது தவறுதான்!

அதுபோலவே, பதவி மிட்டாய்களுக்காகக் கட்சி மாறுபவர்களை கூட்டணியில் வைத்துக் கொண்டதும் தவறுதான்!

24 மணி நேரத்தில், அமைச்சராக இருந்து—பிறகு எதிர்க்கட்சிக்கு போய்—அதன் பிறகு திரும்புபவர்களை வைத்துக் கொண்டிருந்ததும் தவறுதான்!

## கீழ்நிலைக்குத் தள்ளப்படுகிறது!

கவர்னருக்கு, அமைச்சரவையைக் கலைக்கும் அதிகாரம் இருப்பதாக இப்போது கூறலாம்; ஆனால், அது தேவைதானா—சரிதானா என்பதை, தலைமை நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்க வேண்டும்.

பொதுவாக இந்த அரசியல் நிகழ்ச்சிகள் காட்டும் பாடம், 'இந்தியாவில் சனநாயகம் ஆட்சியாளரால் கீழ்நிலைக்கு தள்ளப்படுகிறது' என்பதுதான்!

## பதில் கிடைத்தாக வேண்டும்

மேற்கு வங்கத்தில் நக்சல்பாரி நிலத் தகராறு நடைபெற்றபோது டில்லி தலையிடவில்லை; கேரோக்களும் வேலை நிறுத்தங்களும் நடைபெற்றபோது டில்லி தலையிடவில்லை; ஆனால், நக்சல்பாரி இல்லாதபோது—'கேரோக்களை அனுமதிக்கமாட்டேன்' என்று முதலமைச்சர் அஜாய் முகர்ஜி கூறிய பிறகு—இந்த அமைச்சரவைக் கலைப்பு உத்தரவு வரக் காரணம் என்ன?—இந்தச் சிக்கல் தீர்க்கப்பட வேண்டும்; இந்த குழப்பம் தெளிவுபட வேண்டும்; இந்த அறைகூவலுக்கு பதில் கிடைத்தாக வேண்டும்.

வெளிப்படையாக, டில்லிப் பேரரசின் செயல் நமக்கு அறிவுறுத்துவது இதுதான்—

**எந்த ஒரு காங்கிரசு அல்லாத அரசாங்கமும் நெடுங்காலம் இயங்குவதை, டில்லி அரசு பார்த்துக் கொண்டிருக்க, அதற்குச் சகிக்காது!**

## இதற்குப் பெயர்தான் சனநாயகமா?

மேற்கு வங்கத்திலும், அரியானாவிலும் நடந்த அரசைப் பற்றி மக்களுக்கு எந்தவிதமான அதிருப்தியும் இல்லை; ஆனால், அது சிலருக்குப் பிடிக்கவில்லை: ஆகவே, இரு மாநில அரசுகள் கலைக்கப்பட்டன!

இன்றுள்ள அரசியல் சட்டம், எந்த மாநிலத்தினுடைய மக்கள் அரசையும் கலைக்கும் அதிகாரத்தை டில்லிக்குத் தந்துள்ளது.

'சட்டம்—ஒழுங்கு குலைந்துவிட்டது' என்பதை மட்டும் கூறி, மாநில அரசுகளைக் கலைத்திட முடியும்; அதற்குக் காரணம் காட்டவேண்டியதில்லை; நிகழ்ச்சிகளை எடுத்துரைக்கத் தேவையில்லை. இதற்குப் பெயர் சனநாயகமா?

## எந்த நிலையில் இங்கு ஆட்சி நடக்கிறது?

நாளைக்கேகூட மத்திய அரசு விரும்பினால், தமிழகத்திலுள்ள சட்டம்—ஒழுங்குத் துறையை எடுத்துக்கொள்ள வழியிருக்கிறது. நாங்கள் வருவாய்த் துறையை, பொதுப்பணித் துறையை நிர்வகிக்கலாம்; ஆனால், காவல்துறையை நிர்வகிக்க முடியாது; ஐ. ஜி.-யை அழைத்துப் பேசமுடியாது; ஒரு வேளை அவர், என்னை அழைத்து உத்தரவிடலாம்; இதற்குப் பெயர் என்ன—சனநாயகமா?

இதுமட்டுமல்ல; டில்லியிலேயும்—மாநிலங்களவையில் மூன்றில் இரு பங்கினர் ஒப்புக்கொண்டால், எந்த மாநில அமைச்சரவையையும் கலைத்துவிடலாம். இப்படிப்பட்ட விசித்திர நிலைக்கு என்ன பெயர்?

இத்தகைய இடையூறுகளுக்கிடையேதான் நான் ஆட்சி நடத்துகிறேன் என்றால், எனக்கு இருக்கிற அசாதாரண பொறுமைதான் அதற்குக் காரணம்.

## சிலர் ஆசைக்கு ஏற்ப ஆட்சி நடக்கிறது!

**நமது அரசியல் சட்டத்தை, உணர்வில்—'ஓர் உறுப்பு ஆட்சியுள்ள நாடு' என்றும், உருவில்—'கூட்டாட்சியுள்ள நாடு' என்றும் கூறுவார்கள்; ஆனால், இது ஓர் உறுப்பு ஆட்சியுள்ள நாடும் அல்ல—கூட்டாட்சி நாடும் அல்ல! டில்லியிலுள்ள நான்கைந்து பேரின் ஆசைக்கும் அளவிற்கும் ஏற்ற வகையில் நடக்கும் ஆட்சிதான் அது! அந்த ஆட்சிகூட எத்தனை நாள் நடக்குமோ—நான் அறியேன்!**

**ஆகவே, மக்களுக்கு நாம் இந்த உண்மைகளை விளக்கித் தெளிவு ஏற்படுத்தாமல் போனால், அமைச்சரவைக் கலைப்பு உத்தரவுகள் என்பது, அன்றாட நடைமுறை நிகழ்ச்சியாகப் போய்விடும்!"**

## மாநில அரசின் உரிமை

அதிகாரப் பங்கீடு பற்றி அரசியல் சட்டத்திலுள்ள விதிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் அண்ணா கூறியதாவது:—

"கைத் தொழிலானது முழுக்க முழுக்க மாநில அரசின் அதிகாரத்தின்கீழ் வருவதாகும்.

அந்நியச் செலாவணி வசதியுடன் ஏதாவது ஒரு தொழிலை மாநில அரசு ஏற்படுத்த விரும்பினால், அந்நியச் செலாவணிக்காக மத்திய அரசிடம் போக வேண்டியிருக்கிறது.

அந்நியச் செலாவணி, மத்திய அரசின் அதிகாரத்திலுள்ள விவகாரமாகும்.

பாங்கிகள் விவகாரத்தில், மத்திய அரசுக்கு ஏகபோகமான அதிகாரம் இருந்துவருகிறது; ஆனால், லேவாதேவிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம், மாநில அரசிடம் இருந்துவருகிறது.

பாங்கிகள் லேவாதேவியும் செய்துவருகின்றன. பாங்கிகளைத் தேசியமயமாக்குவது பற்றி மத்திய அரசில் பேச்சு இருந்துவருகிறது.

'லேவாதேவி' பற்றிய விதிகள் மாநிலங்களின் அதிகாரப் பட்டியலில் இருப்பதால், பாங்கிகளைத் தேசியமயமாக்கும் யோசனை பற்றி மாநில அரசுகளுடன் மத்திய அரசு ஆலோசனை கலந்தாக வேண்டும்.

---

## 'சேலத்து இரும்பு'

### அண்ணா வெளியிடுகிறார்

சென்னை மாநிலக் கல்லூரி புவியியல் துறைத் தலைமைப் பேராசிரியர் டாக்டர் எஸ். சரவணன் எழுதியுள்ள 'சேலத்து இரும்பு' என்னும் நூலை முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிடுவார்கள்.

இந்நூல் வெளியீட்டு விழா, 24—11—67 மாலை 5-மணிக்கு எழும்பூர் அசோகா ஓட்டலில், சட்டமன்றத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் நடைபெறும்; கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் சிறப்புரையாற்றுவார்.

---

# கொந்தளிப்பு நீடிக்கிறது

## கல்கத்தா நகரில் துப்பாக்கிச் சூடு

கல்கத்தா, நவ. 23—

மேற்கு வங்கக் கூட்டணி ஆட்சி நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநிலம் முழுவதும் கொதிப்பும் குமுறலுமான நிலை நீடித்து வருகிறது.

கல்கத்தா நகரில் நேற்று ஆறு இடங்களில் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்; கண்ணீர்ப்புகை வீச்சும் தடியடியும் நடத்தப்பட்டிருக்கிறது. பலர் காயமடைந்திருக்கின்றனர்.

இராணுவப் படையும், மத்திய அரசின் ரிசர்வ் போலீசுப் படையும் ஆர்ப்பாட்டக்காரர்களோடு போராடியதாகவும், ஒரு கட்டத்தில் சமாளிக்க முடியாத அளவுக்குப் பரவலாக வன்செயல்களில் ஈடுபட்டதாகவும், எனினும் நள்ளிரவுக்குமேல் நிலைமை கட்டுக்கு அடங்கியது என்றும் போலீஸ் கமிஷனர் திரு. பி. கே. சென் அறிவித்தார்.

போலீசார் ஐந்து இடங்களில் 23 ரவுண்டுகள் சுட்டனர்; ஆறுவது துப்பாக்கிச் சூடு இரவு 11 மணிக்கு நடைபெற்றது.

தென் கல்கத்தாவில் போக்குவரத்துப் போலீசுக்காரர் நிற்குமிடத்துக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் நெருப்பு வைத்தபோது போலீசார் சுட்டனர்.

காயமடைந்த 20-பேர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்; அவர்களில் 12-பேர் குண்டுக் காயமடைந்திருக்கின்றனர்.

நகரில் 48 மணி நேர வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இரயில்கள், பஸ்களெல்லாம் ஓடவில்லை—சாலைகளிலே கிடக்கின்றன; கடைகள், பள்ளிகளெல்லாம் மூடப்பட்டன.

தடைமீறி ஊர்வலம் நடத்தியபோது போலீசாருக்கும்—ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது.

இன்றும் நேற்றைய நிலைமையே நகரில் நீடிக்கிறது. அமைதியை நிலைநாட்டப் போலீசார் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

---

## முன்கூட்டியே தெரிந்திருந்த ஒரே மனிதர்!

"நவ. 21-ந் தேதி, வங்காளத்தில், அஜாய் முகர்ஜி அமைச்சரவை கலைக்கப்பட இருக்கிறது" என்பதனை முன்கூட்டித் தெரிந்திருந்த ஒரே மனிதர், நாடாளுமன்ற உறுப்பினர் மது லிமாயி அவர்களாகத்தான் இருக்க முடியும்"

என, 'ஸ்டேட்ஸ்மன்' இதழின் புதுடில்லி நிருபர் எழுதியுள்ளார்.

ஏனெனில், 20-ந் தேதி 11-மணியளவிலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றினை அவர் மக்களவையில் தாக்கல் செய்திருந்தார்.

ஒரே வரியில்—காரணமேதும் கூறாத அந்தத் தீர்மானம்தான் தொடர்ந்து இரண்டு நாட்களாக நாடாளுமன்றத்தில் புயலை வீசச் செய்தது!

---

## நடக்க இருப்பவை

### 25--11--67

**திண்டுக்கல்**

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு; தலைவர்: சமால் மொய்தீன்; பேசுவோர்: எஸ். கஸ்தூரி பி.எஸ்சி., அ. தங்கவேலு, க. வே. வி. இராசன், பொன். சீனிவாசன்.

**கலைநிகழ்ச்சி**

கோபி தி. மு. க. சார்பில் 25—11—67 இரவு 7-மணிக்கு பெரியார் திடலில், முருகுபாண்டியனின், 'அண்ணாவின் ஆட்சி' என்னும் கலைநிகழ்ச்சி நடைபெறும்.

---

அமைச்சர்

## ஏ. கோவிந்தசாமி

### சுற்றுப்பயணம்

நவ. 25 காலை 9-மணி: திண்டிவனம்; 11-மணி: செஞ்சி; பகல் 1-30 மணி: விழுப்புரம்; மாலை 4-மணி: திருக்கோயிலூர்; 6-மணி: இளவரசன் கோட்டை; இரவு 7-மணி: கள்ளக்குறிச்சி.

நவ. 26 காலை 9-மணி: விருத்தாசலம்; 11-மணி: சிதம்பரம்; மாலை 5-மணி: கடலூர்; இரவு 7-மணி: குறிஞ்சிப்பாடி.

நவ. 27 காலை 8-மணி: பாண்டிச்சேரி; பகல் 1-மணி: சென்னை.

---

## முதல் காட்சிக்குப் பலியான...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கூடக் காட்டிக்கொள்ளாமல், அலட்சியத் தோற்றத்துடன் இருந்தார்!

"ஆறு மாதம் கழித்துத் திரும்பவும் வரும்போது, இருமடங்கு சக்தியுடன் வருவேன்" என, நறுக்குத் தெரித்தாற்போல் கூறினார் சிங்!

—[அரியானா அமைச்சரவை கலைப்புப் பற்றி சண்டிகாரிலிருந்து 'ஸ்டேட்ஸ்மென்' நாளிதழின் சிறப்புச் செய்தியாளர் தந்துள்ள தகவலின் ஒரு பகுதி]

---

## தஞ்சையில் கொள்முதல்

தஞ்சை, நவ. 22—

தஞ்சை மாவட்டத்தில் கடந்த ஞாயிறுவரை 1,62,000 டன் அரிசி கிடைக்கக்கூடிய குறுவை நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இதில் 1,27,000 டனகள் சென்னை நகரம் உட்பட பற்றாக்குறைப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மொத்தம் குறுவை சாகுபடி செய்யப்பட்ட பகுதிகளில் 10முதல் 15 சதவிகிதம் இன்னும் அறுவடையாகவில்லை.

## மருத்துவமனையில் கே. கோவிந்தசாமி

சென்னை, நவ. 23—

மாநகராட்சி உறுப்பினர் கே. கோவிந்தசாமி அவர்களுக்கு முதுகு எலும்பில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாகப் பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் உள்ள ராமா ராவ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13 அச்சிட்டு வெளியிடப்படுகிறது.)